පාර්ලිමේන්තු ප්‍රකාශන මලා අංක : 222

ආයතනයේ නම : කොළඹ මහා නගර සභාව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා

සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ

හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 222

நிறுவனத்தின் பெயர் - கொழும்பு மாநகர சபை

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும்

மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

**Parlimentary Series No: 222**

**Name of the Institution : Colombo Municipal Council**

**Submission of observations of Hon. Minister and steps taken with regard to**

**the reports tabled by the Committee on Public Accounts in terms of**

**Standing Order No119(4)**

M.A. NOUSHAD MOHAMED
BLE(Colombo),MA(econ)(UOK)
Chief Translator
Government Translator Service - Class-I (W.P)
Municipal Secretary's Department
Colombo Municipal Council
Town Hall, Colombo 07.

## அரச கணக்குக் குழு – பாராளுமன்ற வெளியீட்டுத்தொடர் 222

## கொழும்பு மாநகர சபை

| தொடர் இலக்கம் | குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | தற்போதைய நிலைமை மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 01 | கொழும்பு மாநகர சபையின் வரி அறவிடுதல் நடவடிக்கைகள் 2000 ஆம் ஆண்டிலிருந்து கணினி அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 2014 ஆம் ஆண்டிலிருந்து இணையவழி (நிகழ்நிலை) முறையில் வருமான அறவீடுகள் செய்யப்படுவதாகவும், தற்போது சுமார் 01 பில்லியன் ரூபாய் வருமானம் இணையவழி முறையில் சேகரிக்கப்படுவதாகவும் கணக்கீட்டு அதிகாரி தெரிவித்தார்.<br><br>வரி வருமானங்களை அறவிடுவதற்காக Korea International Co-Operation Agency (KOICA) நிறுவனத்தின் நிதி உதவியின் கீழ் ஒரு அமைப்பை நிறுவ அமெரிக்க டொலர் 08 மில்லியன் கிடைத்துள்ளதாக கொழும்பு மாநகர சபையின் கணக்கீட்டு அதிகாரி குழுக் கூட்டத்தில் தெரிவித்தார். அந்தத் திட்டத்தின் கீழ் முத்திரை வருமானம், வரிப்பணம் வரி, வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திர வருமானம் ஆகியவற்றை இணையவழி முறையில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கணக்கீட்டு அதிகாரி தெரிவித்தார். | கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (KOICA) மூலம் கொழும்பு மாநகர சபையில் நிறுவப்படவுள்ள வருமான அறவிடல் அமைப்பு (Establish of IT Master Plan on Tax Administration and Implementation of E-Tax System for Colombo Municipal Council) எனும் திட்டத்துடன் தொடர்பாக, கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (KOICA), கொழும்பு மாநகர சபை, அரச நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவை இணைந்து 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் திகதி இத்திட்டத்திற்கான ஒப்பந்த உடன்படிக்கை (Record of Discussion) மீது கையொப்பமிட்டன.<br><br>மேலும், இத்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் KOICA நிறுவனத்தின் பிரதிநிதிகள் கொழும்பு மாநகர சபைக்கு வருகை தந்த பின்னர் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதன் மூலம் அறியத்தருகின்றேன். |
| 02 | உள்ளூராட்சி மன்றங்கள் நீதிமன்ற அபராதத் தொகைகளை அறவிடும் போது, அந்த அபராதத் தொகை தொடர்பான ஆவணங்களைச் சரிபார்த்து பதிவுசெய்து, அதன் பின்னர் அந்த நீதிமன்ற அபராதத் தொகைகள் நீதிமன்றத்தால் சான்றளிக்கப்பட்ட பின் மாகாண இறைவரித் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படுவதாக கணக்கீட்டு அதிகாரி தெரிவித்தார்.<br><br>நீதிமன்ற அபராதத் தொகைகளை நேரடியாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குவதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறை தற்போது இல்லையெனக் குழு அவதானித்தது. | கொழும்பு மாநகர சபையின் அதிகாரிகள், கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான மாளிகாகந்த, கோட்டை மற்றும் அலுத்தகடை ஆகிய பிரதான நீதிவான் நீதிமன்றங்களுக்கு சென்று துணைப்பட்டியல்களை தயாரிக்கின்றனர். அவ்வாறு தயாரிக்கப்பட்ட துணைப்பட்டியல்கள் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றன. அதன் பின்னர், அந்த துணைப்பட்டியல்களுக்கு உரிய தொகைகள் மாகாண சபையால் எமது அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.<br><br>தற்போதும் இதே நடைமுறை செயல்பட்டு வருவதுடன், நீதிமன்ற அபராதத் தொகைகளை நேரடியாகவும் முறையாகவும் உள்ளூராட்சி |

| | | |
|---|---|---|
| | இதனை கருத்தில் கொண்டு, அரச நிருவாக மற்றும் உள்நாட்டு விவகாரங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, நீதி மற்றும் சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, மேலும் மாகாண சபைகளின் உள்ளூராட்சி அமைச்சுக்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, உள்ளூராட்சிக் மன்றங்களின் வரிப்பணம் வரி , அபராதத் தொகைகள், முத்திரை கட்டணங்கள் போன்ற வரி வருவாய்களை கணக்கிடுவதற்கான நேரடி நடைமுறை ஒன்றை உருவாக்குமாறு குழு, பிரதம கணக்கீட்டு அதிகாரிக்கு பரிந்துரைத்தது.<br><br>அதன்படி, அடுத்தக் கூட்டத்திற்கு நீதி மற்றும் சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் குழு அடிப்படை தொழில்நுட்பக் குழுவிற்கு பரிந்துரை செய்தது. மேலும், இவ்விவகாரம் தொடர்பாக அரச கணக்குகள் குறித்த குழு, நீதி மற்றும் சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கு அறிவுறுத்துவதாகவும் வலியுறுத்தியது. | மன்றங்களுக்கு வழங்குவதற்கான நடைமுறைகளை உருவாக்குவதற்காக தலையீடு செய்ய வேண்டிய நிறுவனங்களாக அரச கணக்குகள் குழுவால் அடையாளம் காணப்பட்டுள்ள அரச நிருவாக மற்றும் உள்நாட்டு விவகாரங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, நீதி மற்றும் சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, மேலும் மாகாண சபைகளின் உள்ளூராட்சி அமைச்சுக்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, நேரடி நடைமுறைகளை நிறுவுவது அரச நிருவாக மற்றும் உள்நாட்டு விவகாரங்கள் அமைச்சின் தலைமையிலேயே மேற்கொள்ளப்படுவது சிறந்ததாகும் என முன்மொழிகிறேன். |

...ha Nanayakkara
...unicipal Commissioner
...olombo Municipal Council


பாலித்த நானாயக்கார,
மாநகர ஆணையாளர்,
கொழும்பு மாநகர சபை.

தொலைபேசி இலக்கம் - 0112699316
பெக்ஸ் இலக்கம்- 0112699316
மின்னஞ்சல் - ma175@colombo.mc.gov.lk


2025/12/23


**M.A. NOUSHAD MOHAMED**
BLE(Colombo),MA(econ)(UOK)
**Chief Translator**
Government Translator Service - Class-I (W.P.)
Municipal Secretary's Department
Colombo Municipal Council
Town Hall, Colombo 07.